

# நட்பேடு

**Magazin der Freunde ✻ Magazine of Friends**

விசுவாவசு வருடம்
புரட்டாசி மடல்


| Sl.No. | Contents | Page No. |
|---|---|---|
| 1 | குறள் பேசும் பாடம் | 3 |
| 2 | ஒளி பரவட்டும் | 4 |
| 3 | கதை கதையாம் காரணமாம் | 5 |
| 4 | ஊர்க்குருவி | 7 |
| 5 | சங்க நிகழ்வுகள் | 9 |
| 6 | Stuttgart Tamil Sangam e.V.– தமிழ்ப் பள்ளி | 12 |
| 7 | Historical Highlights | 14 |
| 8 | Taste Buds – தித்திக்குதே | 18 |
| 9 | பதில் தேடி விளையாடு | 19 |
| 10 | CTRL + Learn: My Computer Adventures | 20 |
| 11 | Another warren in progress | 22 |
| 12 | Short and Easy German Sentences | 25 |
| 13 | STS STAR | 26 |
| 14 | பண்பாடு | 28 |
| 15 | சங்கம் செயல்பாடுகள் | 30 |
| 16 | கீற்றல்கள் | 32 |
| 17 | நிழற்பதிவு | 35 |
| 18 | Blockchain Revolution | 36 |
| 19 | Four houses, one vision | 39 |
| 20 | இறுதியல்ல.., நிறைவு | 43 |

# குறள் பேசும் பாடம்

## தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல்

இந்த குறள் மகனுக்குக் கல்வி கற்பிப்பதன் முக்கியத்துவத்தையும், கல்வியினால் கிடைக்கும் மரியாதையையும் வலியுறுத்துகிறது.

ஒரு தந்தை தனது மகனுக்குச் செய்ய வேண்டிய மிக முக்கியமான நன்மை, அவனை கற்றோரின் கூட்டத்தில் அவையெல்லாம் சிறப்பு பெறும் விதத்தில் கல்வியில் சிறந்தவனாக ஆக்குவதே.



# ஒளி பரவட்டும்

அன்புள்ள வாசகர்களே,

நம் இதழ் இன்னும் ஒரு நிலை உயர்கிறது! புதிய சிந்தனைகள், சிறப்புக் கட்டுரைகள், சுவாரஸ்யமான கதைகள் என இவ்விதழ் முழுவதும் உங்களுக்குப் புதிய அனுபவம் காத்திருக்கிறது.

காமிக்ஸ்களுக்கு ரசிகரா நீங்கள்? அப்படியானால் எதையும் தவறவிட வேண்டாம்! Another Warren in Progress பகுதியில், வேடிக்கை, சாகசம், படைப்பாற்றல் நிறைந்த கதைகள் காத்திருக்கின்றன. எல்லா வயதினரையும் கவரும் சுவையான காமிக்ஸ் உலகம் இப்போது உங்களுக்காக!

இந்த இதழில் தொடங்கும் Blockchain Revolution பகுதியில், ப்ளாக்செயின் என்ன, அது எப்படிப் பணிபுரிகிறது, ஏன் அது உலகம் முழுவதும் முக்கியத்துவம் பெறுகிறது என்பதை எளிமையாகவும் சுவாரஸ்யமாகவும் தொடர்ந்து அறிமுகப்படுத்துகிறோம்.

ஸ்டார் கிட்ஸ் ஸ்பாட்லைட்- Stuttgart தமிழ் சங்கத்தின் சிறுவர்கள் — எங்கள் உண்மையான சிறிய நட்சத்திரங்கள்! அவர்களின் திறமைகள், படைப்பாற்றல், சாதனைகள் பற்றிய சிறப்புக் கட்டுரைகள் இங்கே உங்களுக்காக.

இது துவக்கம் மட்டுமே! இன்னும் பல சுவையான விஷயங்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன. நம் இதழில் மூழ்கி, புதிய அனுபவங்களின் அலை உங்களை உற்சாகப்படுத்தட்டும்!

வாழ்க தமிழ் !!

**பதிப்பாளர்: மஞ்சுபார்கவி சுகுமாரன்**

# கதை கதையாம் காரணமாம்

## விலைமதிப்பில்லாத கல்



ஒரு சிறுவன் மலைப்பாதையில் நடந்துகொண்டிருந்தான். அப்போது அவன் காலின் கீழே ஒளிரும் கல்லொன்றைக் கண்டான். அதை எடுத்துக்கொண்டு, “இது எதற்குப் பயன்படும்?” என்று யோசித்தான்.

அவன் முதலில் அந்தக் கல்லை ஒரு விவசாயியிடம் காட்டினான். விவசாயி சொன்னார்: “இது நல்லது, புல்லை வெட்டப் பயன்படும்.”

அடுத்த நாள் அவன் கல்லை ஒரு தச்சரிடம் காட்டினான். தச்சர் சொன்னார்: “இந்தக் கல் கருவிகளைக் கூர்மையாக்க உதவும்.”

இறுதியில் அவன் அந்தக் கல்லை ஒரு வைர வியாபாரியிடம் காட்டினான். வியாபாரி அதைக் கையில் எடுத்து பார்த்தவுடன், மகிழ்ச்சியோடு சொன்னார்: “இது சாதாரணக் கல் அல்ல… அரிய வைரம்!"

சிறுவனுக்கு வாழ்வின் அர்த்தம் புரிந்தது !!

**நம்மை யார் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதில் நம்முடைய மதிப்பு குறையாது. உண்மையான மதிப்பு நம்முள் உள்ளது. அதை உணர்வதே வாழ்க்கையின் சாவி**.

1min



> We believe in strong partnerships,
> not just with patients,
> but with people who care about each other.

## WHY US?

- *Germany's first AI-powered dental monitoring system.*
- *3D scans & digital diagnostics for precision and clarity.*
- *In-house dental lab – faster, more accurate results.*
- *Multilingual, culturally aware team.*
- *Personal consultation & transparent treatment – always*

# WEISS32

PLATINUM SPONSER

WEISS32 ZAHNZENTRUM IS A LEADING DENTAL CENTER IN STUTTGART, COMMITTED TO PROVIDING WORLD-CLASS DENTAL CARE, ADVANCED TREATMENTS, AND RADIANT SMILES.WE COMBINE TECHNOLOGY, EXPERTISE AND EMPATHY TO PROVIDE FAMILIES WITH CARE BUILT ON TRUST, TRANSPARENCY, AND COMFORT.

**WITH WARMTH AND EXCELLENCE, WEISS32 ZAHNZENTRUM LIGHTS UP OUR CELEBRATION THIS DIWALI.**

+49 (0) 711 / 76 02 69 | info@weiss32.de | www.weiss32.de

# ஊர்க்குருவி -4

## காலத்திரி !

நல்லதொன்று நான் உரைத்தால்
அல்லதென்று அலறாமல்
தமிழில் உள்ளதென்று பொருளுணர்ந்து
தந்தை மொழி அருளுணர்ந்து
கேட்டிடுவாய் கண்ணே
மனக்கேணி நிறையும்படி ...

கள்ளமற்ற குழந்தை மனம்
கற்றதெல்லாம் உற்றபடி
உற்றார் உறவெல்லாம்
உவந்துன்னை அணைக்கும்படி
வாழ்வதென்று துணிந்து விட்டால்
வையகமே வரமாகும்...

நானும் பெரிதினும் பெரிது கேட்பேன்
என் பேராசான் கேட்டதுபோல் !

தமிழ் மன்னாண்ட ராசனெல்லாம்
தமக்கெனச் சேர்த்தாரா?
அவர்
புதைந்த இடம்
புழுதி மண்டிப் போனாலும்..

வெட்டி வைத்தார் நீர் நிலைகள்
ஆயிரம் வரப்புயர...
கட்டி வைத்தார் ஆலயங்கள்
பாயிரம் விண்ணதிற...
எட்டி வைத்தார் போர்ப்படைகள்
எங்கும் தமிழ் பரவ...
தட்டி வைத்தார் தீயோரை
எளியோர் நிலை உயர..

அது போல
நூறுயிர்க்கு உருதுணையாய்
நூல் சொன்ன...
மேல் சொன்ன...படியெல்லாம்
மனம் செலுத்தி உதவிட்டால்
உன்னை
மாநிலமே கொண்டாடும் !!!

நான் சாமானியன்
பல்லுயிர்க்கும் உதவுவது
பகல் கனவே என நினைத்தால்
ஓர் உயிர்க்கேனும்
உண்மையாய்
உத்தமனாய்
வாழ்வதென்று துணிந்துவிடு...

தாய்க்கு நல்ல பிள்ளையாகு ..
தங்கைக்கு ஏற்ற அண்ணனாகு ..
தோள் கொடுக்கும் நட்பாகு..
தொட்டவருக்கு...
உன் நெஞ்சைத் தொட்டவருக்கு..
உற்ற துணையாகு ..

இல்லாருக்குப் பொருள்கொடு
எல்லோருக்கும் நம்பிக்கை கொடு
கேட்போருக்குத் தமிழ் கொடு
கேளாதோர்க்கும் அன்புகொடு

நூலோர் சொல்லி வைத்த
நுட்பமெல்லாம் அறிந்து
எல்லா உயிர்க்கும் மனிதனாகு ...
கால மணி விளக்கின்
சுடர் விளங்கத் திரியாகு ...!
கால் கடுக்கக் காத்திருக்கும்
காலனுக்கு எதிரியாகு ...!

என்றும் அன்புடன்
மெய்யரசு நடராஜன்

# STS சங்க நிகழ்வுகள்




Stuttgart Tamil Sangam Kids' Weekend Activities

The Stuttgart Tamil Sangam kids had an exciting and enriching weekend filled with learning and fun! They attended an Anger Management Workshop organized by Junge Schloss on 2 nd of August where they learned valuable lessons about understanding emotions and managing anger in positive ways.

Through interactive games, storytelling, and practical exercises, the children discovered how to express their feelings calmly, build empathy, and develop self-control — all while enjoying the process!

# STS சங்க நிகழ்வுகள்





In addition, the kids participated in a Tractor Event on September 6 th which happened in Mullhausen where they got the chance to explore real tractors and understand their working mechanisms. They learned about steering, gears, and how engines power these impressive machines.

The hands-on experience sparked curiosity and gave them a glimpse into the world of farming and machinery. It was truly a weekend of learning, laughter, and new experiences!

A big thanks to all parents, volunteers, and organizers who made these events possible and memorable for the children.



# STS சங்க நிகழ்வுகள்





Stuttgart Tamil Sangam – Navaratri Golu 2025

With the divine grace of Goddess Durga, Lakshmi, and Saraswati, and the support of our wonderful community, we made it happen!

Stuttgart Tamil Sangam successfully organized the Navaratri Golu at Siddhivinayak Temple, Stuttgart, bringing together devotion, tradition, and unity under one roof.
The vibrant Golu display, devotional songs, and cultural programs reflected the true spirit of our tamil heritage and the power of togetherness.

A heartfelt thanks to all our volunteers, participants, temple members, and devotees who made this celebration so special. Your enthusiasm and blessings made our Golu a grand success!





# Stuttgart Tamil Sangam e.V. – தமிழ்ப் பள்ளி



ஜெர்மனியின் ஸ்டுட்கார்ட் நகரில் செயல்பட்டு வரும் Stuttgart Tamil Sangam e.V., தமிழ் சமூகத்திற்காக பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறது. அதன் முக்கியமான கல்வி முயற்சியாக, குழந்தைகளுக்காக சிறப்பாக நடத்தப்படும் மையம் தான் தமிழ்ப் பள்ளி.

**நோக்கம்**

வெளிநாட்டில் வளர்ந்து வரும் சிறார்களுக்கு:

- தமிழ் மொழித் திறன் : வாசித்தல், எழுதுதல், பேசுதல்
- பண்பாடு & பாரம்பரியம் : பாட்டு, இலக்கியம், பழமொழி, வரலாறு
- கலை & கலாச்சாரம் : பாடல், நடனம், நாடகம், திருவிழா

இவற்றைக் கற்பித்து, குழந்தைகள் தாய்மொழியுடன் உணர்ச்சி பிணைப்பை வளர்ப்பதே இந்த தமிழ்ப் பள்ளியின் முக்கிய குறிக்கோள்.



**வகுப்பு அம்சங்கள்**

- வார இறுதி வகுப்புகள், குழந்தைகளின் வசதிக்கேற்ப நடத்தப்படுகின்றன.
- ஆரம்ப நிலை முதல் மேம்பட்ட நிலை வரை பாடத்திட்டங்கள் வழங்கப்படுகின்றன.
- தேர்வுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- திறன் வெளிப்பாட்டிற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

Stuttgart Tamil Sangam e.V. தமிழ் பள்ளி, குழந்தைகளுக்கு மொழி கல்வியை மட்டுமல்லாமல், தமிழ் மரபு, நாகரிகம் மற்றும் சமூக பிணைப்பையும் வழங்குகிறது.





# Stuttgart Tamil Sangam e.V. – தமிழ்ப் பள்ளி

ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம், தமிழ்நாட்டு மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து, NRTIA (Non-Resident Tamils in India Association) மூலமாக வழங்கப்பட்ட பாராட்டு சான்றிதழைப் பெற்றுள்ளது என்பது நம் அனைவருக்கும் பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்கிறது.




இந்த அங்கீகாரம் நம் ஒற்றுமைக்கும், அர்ப்பணிப்புக்கும், தமிழ் மொழி மற்றும் பண்பாட்டைப் பாதுகாக்கும் நம் முயற்சிக்கும் கிடைத்த அழகான பாராட்டாகும்.



இந்த சிறப்பான தருணத்தில், நம் தமிழ் மன்ற உறுப்பினர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர்கள் அனைவருக்கும் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும், அடுத்த தலைமுறைக்குத் தமிழை உயிரோடு கொண்டு செல்லும் பாதையில் ஒரு சிறிய படியாகும். இவ்விருதானது நம்மை மேலும் உற்சாகப்படுத்தி, தமிழின் ஒளி உலகம் முழுவதும் பரவச் செய்யும் என்ற நம்பிக்கை நமக்குள்ளது.

**எங்கு இருந்தாலும், எங்கள் வேர்கள் தமிழில்தான்!**

# Historical Highlights



Photo by DR KISHAN PATEL on Unsplash

A possible war between Rajendra Cholan and Ghazni would have changed Indian history.In 13th-century India, everything was in chaos. Two armies were flipping India's political situation. One was from the north and another from the south. These two armies never met each other, but their influence still reverberates. It was the armies of Mohammed Ghazni and Rajendra Cholan. What if they fought each other?



Photo by pavan gupta on Unsplash

The fight for India was a multi-century struggle. Raiders constantly invaded North India from Afghanistan and Iran. The raider's main purpose was not to overthrow empires and establish their realm. The raid's agenda was to loot valuable wealth from the region. The attacks weakened the trade and the political stability of the area.

# Historical Highlights

On the contrary, the Chola empire strengthened its hold on South India. The Chola empire controlled entire South India and Southeast Asia with a massive army and navy. Raja Raja Cholan established a stronghold for the Chola empire, which son Rajendra Cholan capitalized on later. While the Chola had a stronghold in their heartland, they faced frequent rebellions, and Rajendra Cholan had to set out with his massive army to quell it. Fed up with the uprising, Rajendran Cholan decided to end the rebellious streak once in all for all. In the 13th century, he gathered the largest Chola army ever and set sight on marching toward the Ganges. Any kingdom which will not allow him to cross will be subjugated. His march was brutal. His army pushed aside many kingdoms on its way and reached the banks of the Ganges. He then took water from the Ganges and made the defeated kings carry the water vessels all the way back to his kingdom. Such was the power and determination of the Chola army during the period.



Photo by Harshita Chadha on Unsplash

# Historical Highlights



Photo by Abhishek Donda on Unsplash

On the other hand, at the same time, there was another reverberation in North India. A raiding party from Afghanistan was frequenting the temples in North India for its wealth. The most brutal of the raiders was Mohammed Ghazni. Born in the Ghaznavid dynasty from childhood, he knew about the wealth amassed in the temples in India by its devotees. Once in power, Ghazni set his sights on the temples in the vicinity of his kingdom and raided them. To his surprise, the devotees filled the temple coffers after his loot. Ghazni now got excited and impressed by the immense wealth of India.

For the last time, he decided to gather a vast army and loot the most important temple in north India, the Somnath temple. Somnath temple was the richest of temples in north India, and devotees sprang to protect it. With no mercy, Ghazni mauled down the civilians, reached the temple, and looted the temple up to the last gram of gold.

# Historical Highlights



Photo by Birmingham Museums Trust on Unsplash

To fight against Ghazni's invasion, the local rulers allied. The alliance could have been more fruitful due to internal conflicts and miscommunication. What if Rajendran Chola was made aware of the raid? Rajendran Chola was a strong devotee of Hinduism and constructed many temples. He took the Ganges water for a special ceremony for a temple in his kingdom. Rajendran Cholan and his army were just a few hundred kilometers away from the Somnath temple during his Ganges campaign. If he had been aware of the raid, he would have marched his army to stop the raid, saved the temple, and ended the Ghazni dynasty. If the Ghazni dynasty were not there, then the Mughals would have been in the picture, and the history of India would have been different. As a history buff, I would have loved to see this clash, but unfortunately, it didn't happen. Also, its a good pitch for a book or movie.

-Karthik Nambi

# TASTE BUDS - தித்திக்குதே

## G U A C A M O L E

Guacamole – A Mexican Classic
Guacamole is a traditional Mexican dip made mainly from ripe avocados. It's creamy, flavorful, and healthy — often enjoyed with tortilla chips, tacos, or even as a spread in sandwiches.



### THE RECIPE

- 2 ripe avocados – mashed
- 1 small onion & 1 tomato – finely chopped
- 1 green chili & 2 tbsp fresh cilantro – chopped
- 1 tbsp lime juice
- Salt & pepper to taste

Mix everything gently and serve immediately with chips, bread, or as a topping for your favorite dishes.

### TREND

- Packed with heart-healthy fats
- Rich in fiber and essential nutrients
- Helps maintain energy and glowing skin
- Fresh, tasty, and wholesome — Guacamole is the perfect blend of health and flavor in every bite!



-Manjubhargavi Sugumaran



# பதில் தேடி விளையாடு

**புதிர் 1: அதிக மிட்டாய்**

மீனாவின் பையில் 7 மிட்டாய்.
லேகாவின் பையில் மீனாவை விட 2 அதிகம்.
அருணின் பையில் லேகாவை விட 3 குறைவு.

கேள்வி : யாருடைய பையில் அதிக மிட்டாய்? எத்தனை ?

**புதிர் 2: பூங்கா ஊஞ்சல் வரிசை**

பூங்காவில் மூவர் ஊஞ்சலில் வரிசையாகக் காத்திருக்கிறார்கள்:
ராம், நிவி, கிஷோர்.
ராம் முதல் இல்லை.
கிஷோர் கடைசி இல்லை.


கேள்வி : வரிசை (முதல் → கடைசி ) எப்படி?






-மஞ்சுபார்கவி சுகுமாரன்

# CTRL + LEARN: MY COMPUTER ADVENTURES – EDITION 1



*Discover cool computer abbreviations, shortcuts, and secrets along with me. By Sanjay Santhosh Kumar, Age 12*

## *Computer Basics I Learned*



- *Computers use binary code (1s and 0s) to process all information.*
- *Hardware = the physical parts (keyboard, mouse, monitor).*
- *Software = the programs and apps that make hardware useful.*



## *Abbreviation Corner*


- *CPU → Central Processing Unit* 🧠
- *RAM → Random Access Memory* ⚡
- *USB → Universal Serial Bus* 🔌
- *IP → Internet Protocol* 🌍
- *Wi-Fi → Wireless Fidelity* 📡

## *Shortcut Station*



- *CTRL + C → Copy* 📋
- *CTRL + V → Paste* 📂
- *CTRL + Z → Undo* ↩️
- *CTRL + S → Save* 💾
- *CTRL + A → Select All* ✅
- *ALT + TAB → Switch windows* 🔄
- *CTRL + SHIFT + T → Reopen last closed tab* 🔙

🛡️**_Safety First!_**
✔️ _Use strong passwords (mix numbers, letters, and symbols)._
✔️ _Avoid clicking suspicious links or pop-ups._
✔️ _Keep your antivirus updated._




🛡️🤓 **_Fun Facts Box_**
💡 _The first computer mouse (1964) was made of wood!_
💡 _"Wi-Fi" doesn't actually stand for anything—it's just a catchy name._
💡 _Pressing F5 instantly refreshes a webpage._

🚀 **_Advanced Tips & Tricks_**

- _CTRL + Shift + N → Open a new incognito/private window in your browser_ 🕵️
- _Windows + L → Lock your computer instantly_ 🔒
- _CTRL + T → Open a new browser tab_ 🌐
- _CTRL + D → Bookmark the current page_ ⭐
- _CTRL + Shift + Esc → Open Task Manager to check running apps_ 💻
- _Alt + F4 → Close the current window_ ❌




💡 **_Pro Tip_**

- _Organize files using folders and proper naming to save time._
- _Learn search shortcuts: Windows → Press Windows key + S to quickly find files or apps._



**_About the Author_**

**_Sanjay Santhosh_** _Kumar, 12, loves exploring computers, has started learning coding—especially Python—and enjoys discovering new tech tips each month. Outside the computer, he enjoys reading storybooks and comic books, playing with friends, and has a keen interest in space and general knowledge quizzes._


INTRODUCING
ANOTHER WARREN IN PROGRESS
FUN ! GUARANTEED
ENJOY THE FUN OF THE LATEST ADVENTURE COMIC STORY.

# Another Warren in Progress...




Our Mr. Master (basically from Tamilnadu) is happily counting his first salary in EUR.

*"Wow., what a feeling.., if Gandhi thatha would have been printed in EUR, he would have had happy tears by now...*

*Certainly there is a surplus. What shall I do with all these now????"*

You got a Post.... :)

*"Where shall I start with?*

*If I tend to ask someone, they are running away..,*

*Lets check Youtube !!!"*





!!!! Mr. Master has got a Finfluencer to follow !!!

*“This guy is awesome. Looks like if I follow him, I will be a millionaire soon. ”*

*“So lets jump in !!!! No.., If I become a Milionaire, then I have to think how I can spend. So let’s go slow.”*



Mr. Master goes to sleep to relax He gets a dream. In his dream, he is blessed to meet with Mr. Stockananda where he gets to clarify his questions

*“Mr. Master: Guruji, I have lots of questions on Stock market. But I don’t know how to get them clarified. Pls help me”*



Stockananda thinks.., “This guy has 100 EUR but asks 108 Questions. Who will answer him !!! Ok let me start my part...”

To be continued..,

**Sunderramavignesh Nagarajan**

# Short and Easy German Sentences

- Ich habe einen Hund.
- I have a dog.

- Die Katze schläft.
- The cat is sleeping.

- Die Sonne scheint.
- The sun is shining.

- Ich esse einen Apfel.
- I am eating an apple.

- Das Auto ist rot.
- The car is red.

- Ich gehe zur Schule.
- I go to school.

- Mein Name ist Anna.
- My name is Anna.

- Es regnet heute.
- It's raining today.


- Der Fisch schwimmt im Wasser.
- The fish is swimming in the water.

- Gute Nacht!
- Good night!

Übersetzt von
Herr Guruprasanth Meyyarasu

## STS STAR

# TANZA



BRIGHT EYES, QUICK SMILES, AND A HEART FULL OF DREAMS, TANZA, THE 8-YEAR-OLD FROM STUTTGART WHO LOVES TO DANCE, DRAW, AND DREAM BIG.

FROM GRACEFUL DANCE MOVES TO THOUGHTFUL WORDS, SHE HAS A SPARK THAT LIGHTS UP EVERY ROOM. WHETHER SHE'S SKETCHING HER IMAGINATION OR PLANNING TO HEAL PEOPLE AS A DOCTOR SOMEDAY, THERE'S SOMETHING TRULY SPECIAL ABOUT THIS LITTLE GIRL WHO BELIEVES KINDNESS CAN MAKE THE WORLD BETTER.



## Her Colorful World

When you talk to her, you can instantly feel her energy and joy. Ask her about her hobbies, and she jumps right in with excitement – "**I like coloring and dancing**!" Soon, I found out that she's also quite talented in pencil sketching. Curious, I asked if she usually draws from her imagination or from real people. With a shy grin, she said she could even sketch me if I'd let her!Along with art and dance, she loves swimming too. Her face lights up when she talks about it and there's something about being in the water that makes her so happy.

*LITTLE FEET THAT DANCE, LITTLE HANDS THAT HEAL.*

## Dreams of a Doctor

And when it comes to food, her answer was instant and sweet – "Donut!" she said with a laugh, as if even saying the word made her happy.When I asked her what she wants to be when she grows up, she didn't take even a second to think.

"I want to become a doctor," she said confidently. When I asked why, her reply was as simple as it was thoughtful:Because I can help people when I'm a doctor."

Her father's brother is a doctor too, and she mentioned it proudly.She already knows a few first aid steps as well. "If someone is bleeding," she said seriously, "



we have to wash the wound and then put a band-aid."That small moment showed not just her interest, but her natural kindness and sense of care.

## What Makes Her Smile

When I asked what makes her happy instantly, her answer melted my heart , "**I feel happy when I come home from school and my mom has a surprise for me,**" she said softly. "It can be anything... just something from her."

Talking about her friends made her grin even wider. She loves playing a game called "**Blinde Kuh**" (which means blind cow in German – a fun blindfold catching game). "We blindfold and try to catch each other," she explained, giggling as she described it.

At home, she speaks Malayalam, and she also knows a bit of Tamil. When I asked what Tamil words she knows, she proudly said, "Thanni" (water) and "Saapadu" (food).

## The Dancer Doctor in the Making

The part that touched me most was her kindness. When I asked playfully, "If I'm bleeding, should I come to your house or call you?" she replied immediately, **"You can ring me. I'll come to your home because you're already bleeding – I don't want you to travel. I can take you to the hospital from there."** That answer, simple yet full of care. It showed her genuine compassion.

I couldn't help calling her the "Dancer Doctor – DD." When I joked that she might be too busy seeing patients to dance, she thought for a moment and said, "Then I have to cancel my dancing appointments because I have to see the patients." That thoughtful reply stayed with me – the way she already balances compassion and responsibility at such a young age.

When I asked her for one final wish, she didn't ask for toys or sweets. She simply said,

"I want to become a great dancer, better than what I am now."

Talking to TANZA was such a heartwarming experience, full of laughter, innocence, and genuine thoughts. Children like her remind us that dreams don't have to be big to be beautiful but they just have to come from the heart.

Exclusive Kids' Feature by: Manjubhargavi Sugumaran

# பண்பாடு



**நமது தமிழ்க் கலைகளின் பாதுகாப்பைச் சாத்தியமாக்கும் முயற்சி :**
நம்முடைய பாரம்பரியக் கலைகள் வெறும் பொழுதுபோக்கு அல்ல. அவை நமது மக்களின் வாழ்வு, நம்பிக்கை, வரலாறு மற்றும் பண்பாட்டின் ஆழமான பிரதிபலிப்புகள். காலந்தோறும் வாய்மொழியாகவும், நடைமுறையாகவும் கடத்தப்பட்டு வந்த இந்தக் கலைகள், இன்று பல காரணங்களால் அழிவின் விளிம்பில் நிற்கின்றன. அவற்றை மீட்டெடுப்பது, அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்ப்பது நமது கடமையாகும்.

**அழியும் நிலையில் உள்ள சில கலைகள்**
தமிழ்நாட்டில் இன்னும் உயிர்ப்புடன் இருக்கும் சில கலைகள் பற்றியும், அவற்றின் முக்கியத்துவம் குறித்தும் இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

- **தெருக்கூத்து:** இது பாடல், இசை, நாடகம் எனப் பல அம்சங்களை உள்ளடக்கிய ஒரு கலை வடிவம். வரலாற்று ரீதியாக, இது சமூக சீர்திருத்தக் கருத்துக்களையும், புராணக் கதைகளையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் ஒரு ஊடகமாக இருந்தது. ஆனால், இன்று இந்த கலைக்கு போதிய ஆதரவு இல்லாததால், கலைஞர்கள் பெரும் சிரமத்தைச் சந்தித்து வருகின்றனர்.
- **ஒயிலாட்டம்:** ஆண்கள் மற்றும் பெண்களால் ஆடப்படும் இந்த நாட்டுப்புற நடனம், அதன் மென்மையான அசைவுகளுக்கும், துடிப்பான தாளத்திற்கும் பெயர் பெற்றது. குழுவாக நின்று இரண்டு கைக்குட்டைகளை அசைத்து, ஒயிலாக ஆடும் இந்த நடனம், கிராமியத் திருவிழாக்களில் ஒரு அங்கமாக இருந்தது.
- **கரகாட்டம்:** தலையில் ஒரு செம்பை (கரகத்தை) சுமந்துகொண்டு ஆடப்படும் இந்த நடனம், மழைத் தெய்வமான மாரியம்மனுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இது வீரத்திற்கும், திறமைக்கும் எடுத்துக்காட்டாய் நிற்கும் ஒரு கலை.





- **சிலம்பாட்டம்:** இது ஒரு தற்காப்புக் கலை. சிலம்புக் குச்சிகளை வைத்து விளையாடும் இந்தக் கலை, வீரர்களின் பயிற்சிகளில் ஒரு முக்கிய அங்கமாக இருந்தது. நமது பண்டைய வரலாறு மற்றும் வீரம் ஆகியவற்றை உணர்த்தும் கலைகளில் இதுவும் ஒன்று

**கலைகள் அழியக் காரணங்கள்**
இன்றைய நவீன உலகில், இந்த கலைகள் மெதுவாக மறைந்து வருவதற்கு சில முக்கிய காரணங்கள் உள்ளன:

- பொது மக்களின் ஆர்வம் குறைந்தது: நவீன பொழுதுபோக்கு அம்சங்கள் அதிகரித்ததால், பாரம்பரியக் கலைகளைப் பார்க்க வரும் பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டது.
- பொருளாதார நெருக்கடி: கலைஞர்களுக்கு இந்த கலைகளை மட்டுமே நம்பி வாழ்வது கடினமாக உள்ளது. இதனால், இளைய தலைமுறையினர் வேறு தொழில்களை நோக்கிச் செல்கின்றனர்.
- நகரமயமாதல்: நகரங்களில் இந்த கலைகளை நிகழ்த்தப் பெரிய பொது இடங்கள் கிடைப்பதில்லை. இதனால், இந்தக் கலைகள் பெரும்பாலும் கிராமியப் பகுதிகளில் மட்டுமே எஞ்சியுள்ளன.

**சாத்தியமாக்கும் முயற்சி**
இந்த கலைகளை அழிவிலிருந்து காப்பாற்ற, நாம் சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதைச் சாத்தியமாக்க நாமும் பங்களிக்கலாம்.

- டிஜிட்டல் ஆவணப்படுத்துதல்: இந்தக் கலை நிகழ்ச்சிகள், கலைஞர்களின் பேட்டிகள், மற்றும் அவற்றின் வரலாறு ஆகியவற்றைக் காணொலி மற்றும் ஆடியோ வடிவங்களில் சேமித்து வைக்க வேண்டும். இதன் மூலம், உலகின் எந்த மூலையில் உள்ளவர்களும் இதை எளிதாக அணுகலாம்.
- கல்வித்திட்டத்தில் சேர்த்தல்: பள்ளி மற்றும் கல்லூரிகளில் இந்தக் கலைகளைப் பற்றிய பாடங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், இளம் தலைமுறையினருக்கு நமது பண்பாட்டின் மீது ஆர்வம் ஏற்படும்.
- சமூக வலைத்தளங்களின் பங்கு: சமூக வலைத்தளங்கள் மூலம் இந்த கலைகளைப் பற்றிய காணொலிகளைப் பகிரலாம். இது உலகெங்கிலும் உள்ள தமிழர்களிடம் இந்த கலைகளைக் கொண்டு சேர்க்கும்.
- அரசின் மற்றும் சமூகத்தின் ஆதரவு: அரசு, பண்பாட்டு அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் இந்த கலைஞர்களுக்கு நிதி மற்றும் தளவாட உதவிகளை வழங்க வேண்டும்.

**முடிவுரை**

நமது தமிழ்க் கலைகள் நமது அடையாளங்கள். அவற்றைப் பாதுகாப்பது, நமது முன்னோர்களுக்கும், வருங்கால சந்ததியினருக்கும் நாம் செய்யும் நன்றிக் கடன். வாருங்கள், இந்த கலைகளை மீட்டெடுப்போம்; அவற்றின் பெருமையை உலகுக்கு எடுத்துரைப்போம்.

**பாலாஜி**

# ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V. - செயல்பாடுகள்

**அன்பான தமிழ் உறவுகளே,**

முந்தைய நிர்வாகத்திடம் இருந்து பொறுப்பேற்று மூன்று மாதங்கள் கடந்துவிட்டன. இந்தக் குறுகிய காலத்திலேயே, ஸ்டுட்கார்ட் தமிழ் சங்கம் பல்வேறு துறைகளில் தீவிரமாக செயல்பட்டு வருகிறது. நிர்வாகம், நிகழ்வுகள், சமூக ஒத்துழைப்பு மற்றும் நீண்டகால வளர்ச்சி ஆகியவற்றில் முன்னேற்றங்களை அடைந்துள்ளோம். இங்கே, நாங்கள் தற்போது செயல்பட்டு வரும் முக்கிய 8 தலைப்புகளை சுருக்கமாக வழங்குகிறோம்:



**1. குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான நிகழ்வுகள் திட்டமிடல்**
சமீபத்தில் நடைபெற்ற Kodai Holiday Kids Event மிகுந்த உற்சாகத்துடன் நடைபெற்றது. மேலும் நிகழ்வுகள் விரைவில் அறிவிக்கப்படும். நமது பொதுச்செயலாளர் மற்றும் J.S. கலாச்சார குழுவிற்கு நன்றி! ஸ்டுட்கார்ட் தமிழ்ச்சங்கம் நடத்தும் தீபாவளி விழாவுக்கான பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. கலாச்சார குழுவினர் சிறப்பான பணியை செய்து வருகின்றனர். குழுத் தலைவர்கள் பல்வேறு சுவாரஸ்யமான கலாச்சார நிகழ்வுகளை திட்டமிட்டு ஒருங்கிணைத்து வருகின்றனர். அவர்களின் சிறப்பான முயற்சிக்கு பாராட்டுகள்!

**2. ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சி நிகழ்வுகள் – செயல்படுத்தப்பட்டது!**
குழந்தைகள் மற்றும் பெரியவர்களுக்கான STS Fitness Challenge வெற்றிகரமாக நடைமுறையில் உள்ளது. சுமார் 25 குழந்தைகள் மற்றும் 100-க்கும் மேற்பட்ட பெரியவர்கள் 4 குழுக்களாக பிரிந்து பங்கேற்று வருகின்றனர். இது நமக்கு பள்ளி நாட்களை நினைவுபடுத்துகிறது! ஆரோக்கியம் மற்றும் உடற்பயிற்சியை ஊக்குவிக்கும் இந்த முயற்சி, சமூகத்தில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. இந்த அருமையான முயற்சியை திட்டமிட்டு செயல்படுத்திய நமது Health and Fitness குழுவிற்கு மனமார்ந்த நன்றிகள்!

**3. Sponsorship Partners – நீண்டகால ஆதரவாளர்கள்**
நமது சங்க வளர்ச்சிக்காக, பல நிறுவனங்களுடன் நீண்டகால ஆதரவாளராக
இணைவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. Deniz Unver Real Estate Investments மற்றும் Weiss32 நிறுவனங்களுடன் கூட்டாண்மை ஒப்பந்தம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. இந்த ஆதரவு, நமது நிகழ்வுகள் மற்றும் சமூக சேவைகளை மேலும் வலுப்படுத்தும்.

**4. PRO துறையின் செயல்பாடுகள்**
PRO குழுவின் செயல்பாடுகள் மூலம் சமூக ஊடகங்களில் நமது பங்களிப்பு அதிகரித்துள்ளது. இது நமது வளர்ச்சிக்கு முக்கியமானது.

**5. ஜெர்மனியில் முக்கிய நிகழ்வுகளில் பங்கேற்பு**
தமிழ் கற்கும் புதிய முயற்சிகள் குறித்து Madan Karki நடத்தும் சந்திப்பிலும், Halle பல்கலைக்கழகத்திற்கு செல்லும் திட்டத்திலும் பங்கேற்கும் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. J.S. கலாச்சார குழு இதை முன்னெடுத்து வருகிறது.

**6. தமிழ் பள்ளி மாணவர்களுக்கான தேர்வுகள்**
நமது தமிழ் பள்ளி மாணவர்களுக்கான தேர்வுகள் வெற்றிகரமாக நடைபெற்றன. தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றி ! Tamil Virtual Academy தேர்வுகளை மதிப்பீடு செய்து வருகிறது. அனைவரும் சிறப்பாக தேர்ச்சி பெறுவார்கள் என நம்புகிறோம்.

**7. தமிழ்நாடு முதல்வரிடமிருந்து விருது**
கொலோனில் கடந்த மாதம் நடைபெற்ற நிகழ்வில், நமது தமிழ்ப் பள்ளிக்கு தமிழ்நாடு முதல்வர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் விருது வழங்கினார். இது நமது தமிழ் பள்ளியின் அருமை மற்றும் சமூக பங்களிப்பை வெளிப்படுத்தும் முக்கியமான அங்கீகாரம்!
மேலும், தமிழ்நாடு அரசுடன், ஐரோப்பாவிலுள்ள அனைத்து தமிழ் சங்கங்களும் இணைந்து, தமிழ் மொழி மற்றும் கலை ஆசிரியர்களை நேரில் கொண்டு வந்து மாணவர்களுக்கு கற்பிக்க ஒரு புதிய முயற்சி குறித்து விவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

**8.STS மாத நிகழ்வுகள் – ஒரு வெற்றிப் பயணம்**
STS மாத நிகழ்வுகள் மிகுந்த வெற்றியைப் பெற்றுள்ளன. பல உறுப்பினர்கள் இதில் பங்கேற்று, நமது தமிழ்ச் சமூகத்தில் ஒருமைப்பாடு மற்றும் ஒத்துழைப்பை உருவாக்கியுள்ளனர்.

**முடிவுரை**
நமது குழுவின் உற்சாகம் மற்றும் அர்ப்பணிப்பு நம்மை தொடர்ந்து முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கிறது. உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் நமது வளர்ச்சிக்கு முக்கியமானது. நாம் ஒன்றாக இணைந்து, தமிழ் சமூகத்தில் மேலும் பல சாதனைகளை உருவாக்குவோம்!

**அன்புடன்,**
**நிர்வாக குழு**
**ஸ்டுட்கார்ட் தமிழ்ச் சங்கம் e.V.**



# கீற்றல்கள்



-Anusha Ramamurthy






SHREYA

# கீற்றல்கள்




ARUNESH



AKSATHA



# நிழற்பதிவு

*Hope*
*-the silent companion in solitude and a promise whispered by the morning breeze!*

-Sivakumar Murugesan

# BLOCKCHAIN REVOLUTION



In recent years, blockchain technology has emerged as one of the most transformative innovations in the digital era. While often associated with cryptocurrencies like Bitcoin, blockchain's potential goes far beyond digital money. So, what exactly is blockchain, and why is it considered revolutionary?

## WHAT IS BLOCKCHAIN?

At its core, blockchain is a distributed digital ledger that records transactions across a network of computers.

Unlike traditional databases managed by a central authority, blockchain operates on a decentralized system, meaning no single entity controls the data.

Every participant in the network has access to the same information, ensuring transparency and trust.



## HOW DOES IT WORK?

**Blocks:** Data is stored in units called blocks.

**Chain:** These blocks are linked together chronologically, forming a chain.

**Security:** Each block contains a cryptographic hash of the previous block, making it nearly impossible to alter past records without changing the entire chain.

This structure ensures immutability; once data is recorded, it cannot be tampered with.

## KEY FEATURES

**Decentralization:** No central authority; the network is maintained by participants.
**Transparency:** All transactions are visible to authorized participants.
**Security:** Cryptographic techniques protect data from fraud and hacking.
**Immutability:** Records cannot be changed retroactively.

## APPLICATIONS BEYOND CRYPTOCURRENCY

**Finance:** Faster, cheaper cross-border payments.
**Supply Chain:** Real-time tracking of goods for authenticity.
**Healthcare:** Secure sharing of patient records.
**Voting Systems:** Tamper-proof digital voting.

Blockchain promises a future where trust is built into the system, reducing the need for intermediaries and lowering costs.

As businesses and governments explore its potential, blockchain could redefine how we exchange value, verify identity, and secure data.

**Example: Sending Money Without a Bank**

Normally, if Tilak wants to send Kamal €10, he uses a bank. The bank checks his balance and updates its records.

With blockchain, it works differently:

- Tilak tells the network: "I'm sending Kamal €10."
- The network verifies if Tilak actually has €10.
- Once confirmed, the transaction is written into the next block.
- That block is locked and linked to the previous one, making it tamper-proof.
- Kamal receives the money within seconds — safely and instantly.

**No bank.**

**No middleman.**

**Just a secure, transparent system.**

This is one simple use case of blockchain. In the upcoming articles, we'll explore even deeper into the world of blockchain.



**In short: Blockchain is not just a buzzword; it's a foundational technology shaping the future of digital trust.**

## Explaining Blockchain to a beginner

I think of blockchain as a shared notebook.

- Each time someone makes a transaction, it's written on a new page.
- When the page is full, it's sealed and added to a growing stack of pages — the chain of blocks.
- Everyone in the group has the same notebook. If anyone tries to cheat by changing a page, it won't match the others, so the system rejects it.

That's how blockchain keeps records safe, transparent, and trustworthy!

-Kirubakaran Kumara Vijayan

# FOUR HOUSES, ONE VISION

***How Stuttgart Tamil Sangam Inspires Fitness Through Virtue, Knowledge, Passion and Love***







**Aram · Arivu · Aarvam · Anbu — four houses, four values, one community**

Stuttgart Tamil Sangam (STS) has taken a bold step to make fitness and sport more engaging for its members. By introducing a house separation system, the Sangam has created four vibrant houses.

Aram (Virtue), Arivu (Knowledge), Aarvam (Passion), and Anbu (Compassion/Love) — each with its own mascot and motto. Together, they form the foundation of an annual cycle of fitness and sports challenges, coordinated by the STS Health & Fitness Team. This model doesn't just split participants into groups. It builds identity, pride and healthy rivalry. It encourages members of all ages to step forward, get active and carry their houses forward in pursuit of the House Cup.

## Aram – Virtue

Mascot: Elephant
Tagline: "Power with purpose, wisdom in stride."
Captain: Balaji Thirumalai Ramesh
Values: Discipline · Integrity · Service
Strong yet steady, Aram embodies purposeful strength and wisdom, leading with calm determination.

## Arivu – Knowledge

Mascot: Owl
Tagline: "Eyes wide open, mind ever sharp."
Captain: Purnima Murali
Values: Learning · Curiosity · Strategy
Arivu thrives on intelligence and awareness, proving that knowledge is the sharpest tool in sport and life.

## Aarvam – Passion

Mascot: Lion
Tagline: "Roar with passion, lead with fire."
Captain: Prema Ramachandran
Values: Energy · Leadership · Courage
Bold and fierce, Aarvam channels unstoppable passion and drive, inspiring others to play with intensity.

## Anbu – Love

Mascot: Dove
Tagline: "Grace in strength, peace in motion."
Captain: Yaliniprabha Sriram
Values: Love · Empathy · Teamwork
Gentle yet resilient, Anbu promotes inclusion and harmony, reminding everyone that sport is also about compassion.



**Kids Fitness Program (16 September – 15 October)**

Designed for children aged 3 to 17, this 30-day initiative encourages kids to engage in 20 minutes of daily physical activity. The focus is on fun and forming habits rather than competition, which is why this program is not house-based. Its aim is simple: to motivate kids to move without the pressure of scoring points.

**Nadaraja 2.0 (27 September – 15 November)**

The flagship challenge for adults aged 17+, now in its newest form, brings the full spirit of the house system alive. Over 50 days, each house must collectively cover 4,500 kilometers. The challenge demands teamwork, endurance and commitment and the house that reaches the target fastest claims victory. More than a competition, Nadaraja 2.0 is about pushing limits and celebrating collective effort.

**Future Tournaments/Challenges**

The Health & Fitness Team also plans to introduce other tournaments and inter-house challenges in the coming months, ranging from sports leagues to wellness-based competitions, ensuring there’s something for everyone.

More Than Trophies While each house aims for glory, the deeper reward lies in participation, personal growth and shared experience. Aram teaches purpose, Arivu expands understanding, Aarvam fuels drive, and Anbu nurtures connection. Together, they remind the community that health is not an individual journey, but a collective celebration.

**Stronger, together, fitter forever**

**STS Health and Fitness Team**



SHAPING YOUR FUTURE

# DENIZ ÜNVER REAL ESTATE INVESTMENTS

## Ready to invest in German real estate but not sure where to start?

Deniz Ünver Real Estate Investments makes the process simple, transparent, and fully guided, every step of the way.



## what we offer?

1.Understand your financial goals and create a plan that fits you.

2.Share expert insights to help you invest with confidence.

3.Build a tailored strategy to find the right property.

4. Support you through every step from paperwork to purchase.

5. Stay connected even after your investment for long-term success.

PLATINUM SPONSOR

**Dont Hesitate to contact**
**Scan the WhatsApp QR code or message +49 176 21476492**
to discuss your investment plans and discover how Deniz Ünver Real Estate Investments can help you build a secure and prosperous future.

*Deniz Ünver Real Estate Investments adds sparkle to our festive season with trust and community spirit*



General Feedback

இம்மாத நட்பேடு இதழ் பற்றிய உங்களின் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.

அவற்றை stsnatpedu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

# இறுதியல்ல.., நிறைவு

ஒரு மதிய நேரம். வானம் நீலமாக ஜொலித்துக் கொண்டிருந்தது. காற்று வலுவாக வீசியது. அந்தக் காற்றில் சிறுவன் ஆதவன் தன் பட்டத்தைப் பறக்கவிட்டான். பட்டம் எல்லாருக்கும் மேலாக உயர்ந்து பறந்தது. ஆதவனின் கண்களில் மகிழ்ச்சி பொங்கியது.

ஆனால் திடீரென பட்டக் கயிறு அறுந்தது. பட்டம் சுழன்று சுழன்று வானத்தில் மறைந்தது. ஆதவனின் முகத்தில் சோகமே நிறைந்தது.
அவனுக்குப் பட்டம் போனது ஒரு இறுதி போலத் தோன்றியது.
அந்த நேரத்தில் அவனது தாத்தா வந்து சொன்னார்:
“கயிறு அறுந்ததால், பட்டத்தின் பயணம் முடிந்துவிட்டதா? இல்லை பிள்ளை. அது இன்னொரு வானத்தில், இன்னொரு காற்றோடு பறக்கப் போகிறது. அது ஒரு முடிவு அல்ல — அது ஒரு புதிய தொடக்கம்.”

இந்த வார்த்தைகள் ஆதவனின் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்தன. பல வருடங்கள் கழித்து, அவன் படிப்பிலும், வேலையிலும் சில நேரங்களில் தோல்விகளைச் சந்தித்தான். ஆனால் ஒவ்வொரு தடையும் நினைவூட்டியது ஒரே விஷயத்தை:
“இது இறுதி அல்ல. இது இன்னொரு அழகிய நிலைக்கான தொடக்கம்.”

---

பாடம்: வாழ்கையில் வரும் சவால்கள் முடிவு அல்ல. அவை நம்மை இன்னும் வலிமையாக்கி, இன்னும் உயரமாய்ப் பறக்க வைக்கும் புதிய தொடக்கங்கள்.

**--- நன்றி! வணக்கம் ! ---**

ஆசிரியர்: புவனேஸ்வரி மெய்யரசு